## திருப்புவனம் இளைஞர் மரணம்:

# “பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இந்த அரசு ஆறுதலாக நிற்கும்”!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் – பாதிக்கப்பட்டவரின் இல்லத்திற்கு நேரில் சென்றார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் ஆறுதல்!





சென்னை, ஜூலை 3-

திருப்புவனத்தில் காவலர்கள் தாக்கி உயிரிழந்த இளைஞர் அஜீத்குமார் குடும்பத்தினரை, நேற்று முன்தினம் மாலை, முதல்வரின் அறிவுரையேற்று, அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

அப்போது அலைபேசி வாயிலாக முதல்வரும் - இளைஞர் அஜீத்குமாரின் தாயார் மற்றும் சகோதரருக்கு ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வையடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இந்த அரசு ஆறுதலாக நிற்கும்” என்று உறுதியளித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் - திருப்புவனம் மடப்புரத்தில் காவலர்கள் தாக்கி உயிரிழந்த இளைஞர் அஜித்குமார் குடும்பத்தினரை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், அஜித்குமாரின் தாயார் மாலதி, சகோதரர் நவீன் ஆகியோரைச் சந்தித்து ஆறுதல் கூறினார். அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பனுடன் மாவட்ட ஆட்சியரும் உடன் சென்றிருந்தார்.

அப்போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பனின் அலைபேசி வாயிலாக, இறந்த அஜீத்குமாரின் தாயார் மற்றும் சகோதரரைத் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்குக் காரணமானவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அவர்களிடம் எடுத்துரைத்த முதல்வர் அவர்கள், “உங்களுக்கு உரிய உதவிகள் அனைத்தையும் அமைச்சர் பெரியகருப்பன் செய்து கொடுப்பார்” என உறுதியளித்தார்.

இதனையடுத்து - முதல்வர் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**“திருப்புவனம் இளைஞருக்கு நடந்த கொடுமை யாருக்கும் நடக்கக் கூடாதது, யாராலும் நியாயப்படுத்த முடியாத தவறு! கடமை தவறிக் குற்றம் இழைத்தவர்களுக்கு நிச்சயம் இந்த அரசு தண்டனை பெற்றுத் தரும்! பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதலாக நிற்கும்!”**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





வேலூர் மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாலாஜா – ராணிப்பேட்டையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.




ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் குறிப்பாக கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்தில் 6 லட்சம் உறுப்பினர்களை சேர்க்க முடிவு செய்துள்ளதாக நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியுள்ளார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகம் கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் போது ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.




தமிழரின் தாய்மடி கீழடி

சிவகங்கை சீமையின் மாமன்னர்

# சசிவர்ண முத்துவடுகநாதர் அவர்களின்

## 253-வது ஆண்டு நினைவுநாள் 25.06.2025

சிவகங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களுக்கு சென்னை காந்தி மண்டபத்தில் சிலை அமைத்திட அறிவிப்பு செய்த தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

சென்னை காந்தி மண்டபத்தில் அமைக்க இருக்கும் ராணி வேலுநாச்சியாரின் சிலைக்கு அருகிலேயே அவரது கணவர் விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த முதல் போராளி, சிவகங்கையை ஆங்கிலேயருக்கு வரி செலுத்தாமல் 22 ஆண்டுகள் ஆட்சி செய்து மண், மொழி, மானம் காத்து மாண்ட மாமன்னர் முத்துவடுகநாதருக்கும் சிலை அமைத்துத் தர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்கிறோம்.

இராமநாதபுரம் ராஜ்ஜியத்தில் இருந்து, புதுக்கோட்டை இளவரசருக்கு பெண் கொடுத்து புதுக்கோட்டை சமஸ்தானம் தனியாக உருவாக்கப்பட்டது போல, சிவகங்கை அரசர் விஜய ரகுநாத பெருஉடையார் (1730-1750) சசிவர்ணர்க்கு, இளவரசி அகிலாண்டேஸ்வரி நாச்சியாரை, மணம் முடித்து கொடுத்து இராமநாதபுரத்தின் 5-ல் 2 பங்கு நிலப்பரப்பையும், கோவில்களையும், உண்உறைவிட சத்திரங்களையும், கடலோரப் பட்டினங்களையும் பிரித்துக் கொடுத்து சிவகங்கை சமஸ்தானம் உருவாக்கப்பட்டது.

இராமநாதபுரம் அரண்மனையில் இருந்து அனைத்து போர்ப் பயிற்சிகளையும், அரசு நிர்வாகப் பயிற்சிகளையும், பன்மொழிகளையும் கற்றுத் தேர்ந்த இளவரசி வேலுநாச்சியார் சிவகங்கை முதலாவது மன்னர் சசிவர்ணரின் மகனும், தனது அத்தை மகனுமான இளவரசர் முத்துவடுகநாதரை மணந்து சிவகங்கையின் அரசியானார் (1891, History of Madras P.241) சிவகங்கை அரசர் சசிவர்ணர் தனது 20 ஆண்டுகால ஆட்சியிலும் சரி 2வது அரசர் முத்துவடுகநாதர் தனது 22 வருட ஆட்சியிலும் சரி, (8 ஆண்டு காலத்திற்கு பிறகு ஆட்சியை பிடித்து) 10 ஆண்டு காலம் ஆட்சி செய்த வேலுநாச்சியார் காலத்திலும் சரி 50 ஆண்டுகளில் எவரிடமும் இவர்களில் எவரும் எதற்கும் பின்வாங்கியதில்லை.

மதுரையை ஆண்டுவந்த நாயக்கர் வம்சத்தின் பங்காரு திருமலை நாயக்கருக்கு நெருக்கடி கொடுத்த ஆங்கிலேயரின் பிரதிநிதி நவாப்பின் ஆட்சியாளர்களை எதிர்த்து சிவகங்கை மன்னர் சசிவர்ணரும், இராமநாதபுரம் மன்னர் சேதுபதியும் புதுக்கோட்டை மன்னர் தொண்டைமானும் சேர்ந்து 5000 போர் வீரர்களையும், 5000 குதிரை படையையும் திரட்டி ஓரணியில் திரண்டு மதுரைக்கு வந்து பங்காரு திருமலை மன்னரைப் பாதுகாத்து, அரசுக் கட்டிலில் அமரவைத்துச் சென்றனர். நவாப் அன்வருதீன், அவரைக் காப்பதுபோல் நடித்து சிலகாலம் கழித்து பங்காரு திருமலை நாயக்கரை, விஷம் கொடுத்துக் கொன்றார். அதனால் பீதியுற்ற அவரது மகன் விஜயகுமார் திருமலை சிவகங்கை மன்னர் சசிவர்ணரிடம் சரணடைந்தார். அவருக்கு அடைக்கலம் தந்த மன்னர், வெள்ளிக்குறிச்சி கோட்டையில் அவரைத் தங்கவைத்தார்.

1752 ல் ஆலம்கான் மதுரை பிரதேசத்திற்கு பொறுப்பாளராக மாயானா வை நியமித்தார், திருமோகூரில் தங்கி இருந்த மாயானா, மதுரையை மைசூர் அரசுக்கு விற்று விட்டார், இதனை அறிந்த சேதுபதி மன்னரும் தனது சேனை தலைவர் வெள்ளையன் சேர்வைகாரரையும், அரசர் முத்துவடுகநாதர் சிவகங்கை சேனை தலைவர் தாண்டவராயன் பிள்ளையையும் உடன் படைகளையும் அனுப்பி, மைசூரைச் சேர்ந்த குகூசாகிப்யை விரட்டி அடித்து, மதுரையைக் கைப்பற்றினர். தங்களது பாதுகாப்பில் வெள்ளிக்குறிச்சி கோட்டையில் இருந்த இளவரசர் விஜயகுமார் திருமலை நாயக்கர் மன்னரை முத்துவடுகநாதர் அழைத்து வந்து மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில் மண்டபத்தில் முடிசூட்டி பதவியேற்பு விழா (பட்டாபிஷேகம்) நடத்தி மதுரையின் மன்னர் என்பதற்காக செங்கோல் வழங்கி அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்று தங்க வைத்து எதிரிகளுக்கு எச்சரிக்கை செய்து மதுரையை காத்தவர் அரசர் முத்துவடுகநாதர்.

14.03.1756 மதுரையில் சிவில் கவர்னராக ஆங்கிலேயர்களால் நியமிக்கப்பட்ட மதுரை மன்னன் என்று பறைசாற்றிக்கொண்ட யூசுப்கான் (கான்சாகிப்) தான் பதவியேற்ற முதல் நாளே சிவகங்கை அரசர் முத்துவடுகநாதர் வரி செலுத்தாவிட்டால் திருப்புவனத்தையும், சிவகங்கையும் கைப்பற்றுவேன் என்று தாக்கீது அனுப்பினார். வரி கட்ட முடியாது என முத்துவடுகநாதர் கூறியதால் திருப்புவனத்தின் மீது படையெடுத்து ஒருமாத காலம் முற்றுகையிட்ட கான்சாகிப்பின் படைகள், விரட்டியடிக்கப்பட்டன.

சிவகங்கை சீமை படைகள், பிரதானியும் (முதலமைச்சர்) தளவாயுமான (தளபதி) தாண்டவராய பிள்ளை மற்றும் இராமநாதபுரம் படைகள் பிரதானியும் தளவாயுமான தாமோதரன் பிள்ளை, இருவர் தலைமையிலும் அணிவகுத்துச் சென்று மதுரையை முற்றுகையிட்டனர். தகவல் அறிந்து வந்த ஆங்கிலே கவர்னரின் பிரதிநிதிகளிடம் கான்சாகிப்பின் அட்டூழியங்களை எடுத்துக்கூறி, மார்சண்ட் என்ற பிரஞ்சுக்காரர்களுடன் சேர்ந்து பீரங்கி தயாரிப்பதையும், போருக்குத் தயாராவது போன்ற நிலைகளை எடுத்துக்கூறினர். அதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக கூறி படைகளை திரும்பப்பெறக் கோரினர். படைகளும் திரும்பினர். சிவில் கவர்னராக இருந்த கான்சாகிப் டபேதார் சந்தையில் தூக்கிலிடப்பட்டார். அவரது உடல் மதுரை சம்மட்டிபுரத்தில் அடக்கம் செய்யப்பட்டது. கான்சாகிப் பள்ளிவாசல் இன்றும் சம்மட்டிபுரத்தில் உள்ளது.

தஞ்சை மராட்டிய மன்னர் துல்ஜாஜியும், ஆற்காடு மன்னரும் இராமநாதபுரம் சீமை கோட்டையை பிடிப்பதற்காக சுமார் ஒரு மாத காலம், முற்றுகையிட்டும் இராமநாதபுரம் ராணி முத்து திருவாயி நாச்சியாரிடம் தோல்வியுற்றுப் படைகளுடன் திரும்பினர்.

இராமநாதபுரம், சிவகங்கை இராஜியங்களுக்குள் நுழைய முடியாததால் சென்னை மாகான கவர்னரிடம் ஆற்காடு நவாப் கூடுதல் படைகளையும், கூடுதல் நிதிஉதவியும் கேட்டார், அதற்கு மறுத்த சென்னை மாகான கவர்னர் ஜோசையா டுப்ரே அவர்கள் ஹேஸ்டிங் மற்றும் சாமுவேல் ஆர்டர்லி ஆகியோர் அடங்கிய செலக்ட் கமிட்டியை அமைத்து, அறிக்கை கேட்டார். அவர்கள் இந்த மூன்று இராஜியங்கள் எப்போதும், எக்காலத்திலும், எவருக்கும் கட்டுப்படாத, தன்னாட்சி, தனிக்குடியரசு, முடியரசுகள் என 03.04.1771 அன்று அறிக்கை சமர்ப்பித்தனர். அதனால் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை அரசுகளிடம் சமாதானமாக போக வேண்டும் போர் வேண்டாம் என கவர்னர் அறிவுறித்தினார்.

இந்த மூன்று அரசர்களிடமும் சமாதானமாக போக விரும்பாமல். ஆத்திரமடைந்தார் ஆற்காடு நவாப். தன் மகன் உமர் தத்துல் உமரா என்ற ஜோசப் ஸ்மித்திற்கு 24000 பவுண்டு மதிப்பிற்கு சமமான 50000 பக்கோடாக்களை தறுவதாக கூறி அவரும் சம்மதித்து சென்னை கவர்னரின் அறிவுரைகளை லெப்டினென்ட் கர்னல் பாஞ்சூர்க்கு தெரிவிக்காமல் மறைத்து, பாஞ்சூர் படைகளை தன் தலைமையில் வழிநடத்தி காளையார்கோவிலை தாக்க கவர்னர் அனுமதி கொடுத்ததாக பொய்கூறி பாஞ்சூர் படைகளுடன் 25.06.1772 அன்று நவாப்பின் மகன் காளையார்கோவிலில் தங்கியிருந்த முத்துவடுக நாதரையும் இளையராணி கௌரி நாச்சியாரையும் பீரங்கி படைகளாலும், குண்டுகளாலும் துப்பாக்கியாலும் தாக்கி சுட்டனர். காளையார் கோவிலை தாக்கி சிவகங்கை அரண்மனையையும் தாக்கிப் பிடித்தனர். (Love H.O. Vertiger of Old Madras Vol (III) P.71) எந்தவித முன்னறிவிப்பும் இன்றி கூட்டுச் சதியால் திடீரென ஆங்கிலேய படைகளால் சுட்டுக்கொள்ளப்பட்டு உயிர்நீத்த, சிவகங்கையை 22 ஆண்டுகள் நல்லாட்சி செய்து வந்த மன்னர் முத்துவடுகநாதரே விடுதலைப் போராட்டத்தின் முதல் தியாகி ஆவார்.

லண்டன் இந்திய ஹவுஸில் உள்ள இராணுவ கோர்ட்டில் ஆங்கில கிழக்கு இந்திய கம்பெனி இயக்குனர்களால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஆங்கிலேய படை நவாப்புடன் சேர்ந்து அரசரை சுற்றுக் கொன்றது என்ன நியாயம் என்று முறையிடப்பட்டு வழக்கு விசாரனைக்கு வந்தது. லண்டன் பாக்கெட் (London Pocket) மற்றும் பிரிட்டிஷ் கிரானிக்கல் (British Chronical) என்ற இரண்டு ஆங்கில நாளிதழ்கள் லெப்டினன்ட் கர்னல் பாஞ்சூர் காளையார்கோவிலின் கொடூர கொலைகாரன் என்று விமர்சித்தன. இந்திய விடுதலை வரலாற்றில் அன்னிய சக்திகளை ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிட்டு கலத்தில் மடிந்த முதல் இந்திய மன்னர் முத்துவடுகநாதர் தான் என்று குறிப்பிட்டு எழுதினர். விசாரணையில் ஜெனரல் ஜோசப் ஸ்மித்தும், ஆற்காடு நாவப் மகனும் திட்டமிட்டு செய்த சதிகள் நிரூபிக்கப்பட்டது. இராணுவ அதிகாரிகள் பணம் பெற்றுக்கொண்டு செய்த கொலை தாக்குதல் கிழக்கிந்திய கம்பெனிக்கு அவமானம் என்று இராணுவ கோர்ட் ஜெனரல் ஸ்மித்தை பணி நீக்கம் செய்தது. லெப்டினெட் கர்னல் பாஞ்சூர் தனக்குத் தெரிவிக்காமல் மறைத்த கூட்டு சதிக்கு பழியாக்கப்பட்டு விட்டேன் என்று மன்னிப்பு கடிதம் கொடுத்ததால், இராணுவ கோர்ட் அவருக்கு மன்னிப்பு வழங்கியது.

பெரியநாயகி ராணி அகிலாண்டீஸ்வரி நாச்சியாரின் வழிகாட்டுதலின்படி நடந்த அரசர் முத்துவடுக நாதரின் சிறப்பான ஆட்சி பற்றி சிறுகதை மன்னர் எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள் தனது சந்தனத் தேவன் புத்தகத்தில் விவரித்திருப்பார். அரசர் முத்துவடுகநாதர், இளையராணி கௌரி நாச்சியார் இருவரும் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றி நிறைய குறிப்புகள் எடுத்து புத்தகமாக வெளியிட இருந்தார், ஆனால் அதற்கு முன்பே எஸ்.எஸ். தென்னரசு அவர்கள் மறைந்துவிட்டார்.

முத்துவடுகநாதர் தனது ஆட்சிகாலத்தில் கொடுத்த அறக்கொடைகள் ஏராளம். இந்தியாவில் காசி முதல் கன்னியாகுமரி வரையுள்ள அனைத்து கோவில்களில் உணவு, உறைவிட சத்திரங்கள் அமைத்தல், கல்விக்கூடங்கள், பள்ளிவாசல்கள் கட்டித்தந்தை ஆயிரக்கனக்கான செப்பேடுகள் தெரிவிக்கின்றன. சரித்திரச் சான்றுகள் அவ்வளவு இருந்தும், இந்திய வரலாற்றில் அவருக்கு ஒரு சிலை கூட வைக்காமல் அவருடைய சரித்திரம் மறைக்கப்பட்டுள்ளது ஏன் என்று தெரியவில்லை. தமிழரின் தாய்மடி, கீழடி சிவகங்கைச் சீமைக்கு உட்பட்டு இருந்த பகுதியே ஆகும். கால் நூற்றாண்டு காலம் அன்னியரை நுழைய விடாமல் ஆட்சி செய்து தமிழ் மண்ணைக் காத்த மன்னருக்கு நினைவுச் சின்னம், சிலை அமைக்கப்படாத நிலையே இன்றும் நீடிக்கிறது. ஜான்சிராணிக்குக் கிடைத்த பெயர், வேலுநாச்சியாருக்கு இல்லை. அதுபோல இவருடைய தியாகமும் மறைக்கப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்ட வீரர்களை தேடித் தேடி கண்டுபிடித்து அவர்களுக்கு நினைவு சிலைகள் வைத்து பெருமை சேர்க்கும் திராவிட மாடல் அரசு, மாமன்னர் முத்து வடுகநாதருக்கும், சென்னை காந்தி மண்டபத்தில் சிலை வைத்து அவருக்கு பெருமை சேர்க்க வேண்டும். ஆங்கிலேயருடன் போராடி சிவகங்கை சீமையை மீட்டெடுத்த வேலுநாச்சியாருக்கு சென்னை காந்தி மண்டபத்தில் சிலை வைக்க உத்தரவிட்ட

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

சென்னை காந்திமண்டபத்தில் அமைக்க உள்ள வேலுநாச்சியார் சிலைக்கு அருகிலேயே அவரது கணவர் விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த, மாமன்னர் முத்துவடுகநாதருக்கும் சிலை அமைத்திடவும், அதற்கான அறிவிப்பையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

வீரமங்கை வேலு நாச்சியாரின் வழித்தோன்றல்கள்

முனைவர் பிரபா நாச்சியார், Er.ஜெயஸ்ரீ நாச்சியார், Dr.மோகனா நாச்சியார், சங்கீதா நாச்சியார் USA, இவர்களுடன்...

**அக்ரி கணேசன்,** Msc.,(Agri),

கழக தீர்மானக் குழுச் செயலாளர் - மதுரை